

735
10 NOV 19

ஸ்ரீ:

# ஸ்ரீ கிருஷ்ண லீலை

# காளீய நர்த்தனம்.

ஸ்ரீநிவாஸபாகவதர்,
ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஸ்ரீபாக
வத கதையை சுலபமாகவும், சுருக்கமாகவும் கவனம்
பண்ணி பஜனை செய்த பாகத்தில்
காளீயநர்த்தனம் மட்டும்
ஸ்ரீரங்கத்தில்
வஸிக்கும் க. லக்ஷ்மி அம்மாளால்
கவனம் செய்யப்பட்டு
லக்ஷ்மி விலாஸ பிரஸில் அச்சிடப்பட்டது.
1922௵
விலை அணா 2.

உ

ஸ்ரீ ருக்மிணீ ஸத்யபாமா ஸமேத
கிருஷ்ணாய பரப்பிரம்மணே நம:

# ஸ்ரீ கிருஷ்ணலீலா காளீய நர்த்தனம்.

ஸரஸ்வதி ஸ்தோத்திரம்.

அகிலஜென ரக்ஷகியே அனைவர்க்கும் தாயே
ஸகலவித்தைக்கும் அதிபதியே, ஸரஸ்வதியும் நீயே.
என் பேதைவேஷம் தன்னைப்போக்கி போதரஸம்போட்டி
ஆதரவாய் நாவில்வந்து அருள்செய்யுமம்மா.

விருத்தம்.

நான் பெண்மதியால் உரைத்தது பிழைகளிருந்தாலும்
என் புண்ணியனே பொருத்து மனம் சகித்து அருளவேணும்.

மாதா செய்த தவத்தாலே, ஸ்ரீனிவாஸர் கடாக்ஷத்தாலே
ஸ்ரீனிவாஸ பக்தராக பூமியில் வந்தவதரித்தார்.
அவர் திருவேங்கிடமலையில் வந்திருக்கும்போது
ஸ்ரீனிவாஸ மூர்த்திவந்து திருசொப்பனம் சாதித்தார்.
அன்றுமுதல் எல்லையோரடி யளந்த
எம்பெருமான் கண்ணன் லீலையை
நடத்தின அதிசயத்தை பூலோகமெல்லாம் கொண்டாட
பூமியில் பாவம் செய்தவர்க்கு, ஸ்ரீனிவாஸ பக்தர் வந்து
ஜெனங்கள் செய்த பாபம்தீர, பகவன் நாமம் எடுத்தூட்டினர்

"கோபியர்கள் கோதலத்தில்" என்கிற மெட்டு.

கேளடி ஸகியே இந்த விந்தையைக் கேளு
ஸ்ரீனிவாஸ பக்தர் கண்ணன் லீலை செய்ததை (கேளடி)
ஸ்ரீனிவாஸ பக்தரவர் சரித்திரத்தை நான் சொல்ல
சிந்தை மகிழ்ந்து கேளு சகியே நீ (கேளடி)

பட்டணமாம் பட்டணமாம் ஸ்ரீரங்கபட்டணமாம்
பட்டணத்தில் சீனிவாஸ பக்தர் வந்ததும் (கேளடி)

வந்தார் சீனிவாஸபக்தர் அனந்தங்கோடி தாஸருடன்
பந்தத்தை விலக்கும் பரமாத்மாவைபோல் (கேளடி)

நாராயணாவென்று ஸாரமுள்ள கீதங்கள்
பாராயணங்கள் செய்தார் சிரோன்மணீ (கேளடி)

பூலோகமெல்லாம் பிரமிக்க, கண்ணன் லீலைகள் செய்தார்
மெத்த பக்தியுடையவராம், சித்தசுத்தியுடையவராம்
(கேளடி)

வித்தை இந்த உலகமென்று சித்தத்தில் தியானிப்பவராம்
தத்துவத்தை ஆராய்ந்தார் சீனிவாஸ பக்தரவர் (கேளடி)

யசோதை பாலன் வந்து நர்த்தனங்கள் செய்ததைப்போல்
சீனிவாஸ பக்தர் கண்ணன் லீலைகள் செய்தா (கேளடி)

மோகனம் ராகம் "பவநுத" என்ற மெட்டு.

பல்லவி.

வந்தார் சீனிவாஸ பக்தர் சிரோன்மணியும்
ஸ்ரீரங்கத்தில் வந்தார் சீனிவாஸ பக்தசிரோன்மணியும்

அனுபல்லவி.

கண்டத்தில் துளசிமணிமாலைகள் துலங்க
தாஸர்களுடனே வந்தார்

சரணம்.

பூலோகமெல்லாம் கொண்டாட கண்ணன் லீலைகள்செய்தார்
மெத்தபக்தியுடனே சித்தமன மகிழ்ந்து ராமபஜனை செய்தார்
(வந்தார்)

ஸ்ரீரங்கநாச்சியார் ஸன்னதியில் கண்ணன் லீலைகள் செய்தார்
ஸ்ரீரங்கநாயகியும் பார்த்து மனம்பூரித்து ஆனந்தம்கொண்டாள்
(வந்தார்

ஆனந்த பைரவி, "அக்நிபகவானே" என்ற மெட்டு.

பல்லவி.

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சீனிவாஸ பக்தர் ஸ்ரீரங்கம் வந்ததும்
கண்ணன் லீலை நடத்தினர் ஸ்ரீரங்கம்வந்ததும்,

அனுபல்லவி.

கண்ணன் லீலையை பார்க்க கண்கள் ஆயிரம்வேணும்
அவர் சிங்கார லீலையை பார்க்க பதினாயிரம் கண்கள்வேணும்
ஸ்ரீவில்லி

சீனிவாஸ பக்தரும் திருகாலஞானம் அரிந்த சிரோன்மணீ
ஸ்ரீகிருஷ்ணன் லீலைகளை நர்த்தனங்கள் ஆடினதும
சீரான ஸ்ரீரங்கமெல்லாம்
துவாரகை போல் இருந்ததும் ஸ்ரீவில்லி

பூலோகசஞ்சாரீ சீனிவாஸபக்தர் இந்த லோகத்துக்கெல்லாம்
உபச
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளில் சிரந்தவர் ஆர்பாட்டத்துடன்
கண்ணன் லீலை நடத்தினர். சந்தோஷத்துடன் பாடி கண்ணன்
லீலை நடத்தினர். ஸ்ரீவில்

சீனிவாஸ பக்தரும் ரெங்கர் ஸன்னதிவந்து
கண்ணன் லீலை நடத்தினதை, பார்த்தாலும் பாவம் போகும்
பசிகளுடன் தாகம் தீரும் தீராதவினையும் தீரும்
கண்ணன் லீலையை பார்த்தால் ஸ்ரீவில்லி

சீனிவாஸ பக்தரும் ஸ்ரீகிருஷ்ணாவென்று
சிரத்தையுடன் பாடினதும், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும்
பிரசன்னமான அழகை, ஆதிசேஷனலேயும்
அரிந்து சொல்ல போகுமோ ஸ்ரீவில்லி

"முத்திநெறி அறியாத" என்ற மெட்டு,

மலையாளதேசம் போய் சீனிவாஸபாகவதர்
கண்ணன் நர்த்தனங்கள் செய்தார்
அந்த ஜெனங்களெல்லாம் தான் புகழ

சீனிவாஸ பாகவதர் செய்த பாலகோபாலன் லீலைகளை
கொச்சி கரந்த ஸமுகங்களெல்லாம் ஆனந்தமாய்
தான் பார்த்து மலையா

விலையுயர்ந்த ரத்னமணி கையில் சங்கிலிமெடல்களும்
சீனிவாஸ பாகவதற்கு சமுகங்களும்சமர்ப்பித்தார்
மலையா

கொச்சிதேசத்து கனவானும் தூதுவனை அனுப்பிவித்து
சீனிவாஸபாகவதரை அழைத்துசென்று சம்மானித்தார்
மலையா

விலையுயர்ந்த முத்தாஹாரம் மகரகண்டி பதக்கமுடன்
கையில் தோடாவும்
சீனிவாஸ பாகவதற்கு மகானுபாவர் சமர்ப்பித்தார்
மலையா

சீனிவாஸர் கடாக்ஷத்தினால் சீனிவாஸபாகவதர்
பாரெங்கும் புகழ் பெற்று ஆனந்தமாய்வரபார் ஸகியே
மலையா

"மாதவர் வந்தாரே" என்ற மெட்டு.

பல்லவி.

காளிங்க நர்த்தனம் ஆடினரே.
சீனிவாஸ பாகவதர் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில்

அனுபல்லவி.

பாதத்தில் சலங்கைகளும், ஜல் ஜல் ஜல் என்ன
காளிங்க நர்த்தனம் ஆடினதை பார்க்க கண்கள்
ஆயிரம் வேணும் (காளிங்க)

சரணம்.

காளியன் படத்தை விரல் தன்னில் நாட்டியே
கங்கணம் தோள்வளை கரந்தனில் பூட்டியே
வேணுகான விருதுடன் கூட்டியே
மிதித்துகாலால் உடலைபிடித்து, கையினாலே வாலை
குதித்தேன் குதித்தேன் என்றார் சீனிவாஸபாகவதர்
கண்டத்தில் நவரத்நமணிகள், தகதகவென்ன
கையில் சங்கிலிமெடல்களும் பளபளவென்று மின்ன
(காளிங்க)

பாதசிலம்போசை, செல், செல், செல், என்ன
பார்த்து மறையோர்கள் எத்ஸரிகை எத்ஸரிகை என
வேதபுராணங்கள் தா-தை தா-தை என்ன
கோபாலகிருஷ்ணன் கண்டு ஆசையாகவே நின்று
நந்தர்மனையில் சென்று நவநீதங்களை உண்டு
விந்தையாய் கோபாலர்கூடி நல்லோர்களும் மகிழ
எல்லோர்களும் துதிக்க வேணுகோபால
கிருஷ்ணன் ஸர்ப்பத்தின்மேல், நின்றதுபோல்
காளிங்க நர்த்தனம் ஆடினார் சீனிவாஸபாகவதர்
(காளிங்க.)

"ஸந்ததி தாநுமையா" என்ற மெட்டு.

நீரே தயாளோ சீனிவாஸபாகவதர் கண்ணன் அவதாரம்
ஸாக்ஷாத் கண்ணன் அவதாரம்
ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வசிப்பவராம் ஸ்ரீரங்கக்ஷேத்திரம்
வந்து எல்லோருக்கும் ஸ்ரீகிருஷ்ணன் லீலைகளை நர்த்தனங்களை
ஆடி, கண்ணன் அவதாரமாய் எல்லோருக்கும் ஸேவைசாதித்தீர்
(நீரே தயாளோ)

தேசாதிதேசமெல்லாம், புகழ்பெற்றவரும் நீரே
சீனிவாஸமூர்த்திக்கு உத்தம பக்தரும் நீரே
நாராயணாவென்று கீதங்கள் பாடினதும்
சிரான ஸ்ரீரங்கமெல்லாம் கோகுலம் போல் இருந்ததும்
(நீரே தயாளோ)

"வந்தேமாதரமே" என்ற மெட்டு.

மனமே ஜீவகாருண்யங்களே இந்த
சீனிவாஸ பாகவதர் போல் இந்த லோகத்தில்
கண்டதுண்டோ சீனிவாஸபாகவதர்போல்
ராஜாதி ராஜரெல்லாம் புகழும் பாகவதர்
கோபாலகிருஷ்ணன் அவர் மீதில் பிரீதியாக இருப்பர்.
தேசமெங்கும் புகழ்நதிடும் நேசர்
அவர் தாசர்களிடத்தில விசுவாசர்
சீனிவாஸமூர்த்திக்கு தாஸர்
அந்தவானவர்களெல்லாம் மகிழ
இந்த மானிடர்களெல்லாம் புகழ (சீனிவாஸபாகவதர்)

காம்போதி ராகம் "ஸ்ரீராம" என்ற மெட்டு.

பல்லவி.

சீனிவாஸமூர்த்தியும் ஆலோசனைகள் செய்து

சரணம்.

பூலோகஜெனங்களெல்லாம் ரொம்ப, பாபம் செய்குராரென்று
பார்க்கடலில் பள்ளிகொண்ட, பரந்தாமனும் ஜனங்களை பார்த்து
கண்ணன் கண்டு சீனிவாஸ

முப்பத்திமுக்கோடி தேவரிஷிகளில் ஒரு ரிஷியை யவர் அழைத்து
அச்சுதர் எது உரைப்பார் சீனிவாஸ

பூலோகந்தனில் சென்று நீயும், மானிடராயவதரித்து
மகிழ்வுடன் இருந்து சீனிவாஸ

என் லீலைகளை எல்லாம் நர்த்தனங்களாக
ஆடி நீயும் அவர் படிக்கு, பாபம் செய்யும் ஜனங்களை
எல்லாரும் ஈடேறும் பொருட்டாக சீனிவாஸ

முன்னாலே அனுப்பி, பின்னாலேவந்துகோபாலகிருஷ்ணன் அப்போ
பாகவதர்முன்னாலே வந்து நின்று சீனிவாஸ

பாகவதர் செய்யும் லீலைகளை எல்லாம் வேணுகோபாலன் கண்டு
கிருஷ்ணன் சித்தந்தனில் மிக மகிழ்ந்து ஆனந்தம்கொண்டார்
சீனிவாஸ

ஆலிலைமேல் பள்ளிகொண்ட அச்சுதரும் அனுப்பிவைத்தவர் இவர்
மெத்த பக்தியுள்ள பாகவதர் மிக சிரத்தையுள்ள குணசீலர்.
உத்தம பாகவதர் சீனிவாஸ

மங்களம்

"வாரிஜாஸந" என்ற மெட்டு.

சீனிவாஸ மூர்த்திக்கு மங்களம்

ஜயமங்களம்

எல்லையோரடி அளந்த கண்ணனுக்கு மங்களம்

சீனிவாஸ பக்தருக்கு மங்களம் ஜெயமங்களம்

கண்ணன் லீலையை நடத்தின மகானுபாவர்க்கு மங்களம்

சுபமங்களம்.

முற்றிற்று.